# தமிழ்நாடு மாநிலம்- பொது அறிவு கேள்வி மற்றும் பதில்கள் தமிழில்

**Q1.** முதுமொழிக் காஞ்சியின் வேறுபெயர் என்ன?
What is the other name of Mudhumozhi Kanchi?
(a) ஆசாரக்கோவை
(b) அறவுரை கோவை
(c) ஏலாதி
(d) சீதக்காதி

**Q2.** தொண்டு செய்து பழுத்தபழம் என்று யாரை பாரதிதாசன் போற்றுகிறார்?
Whom does Bharathidasan admire as a fruit that has ripen due to charity?
(a) தந்தை பெரியார்
(b) பாரதியார்
(c) அண்ணாதுரை
(d) காந்தியடிகள்

**Q3.** பாரதியார் யாருடைய சாயலில் வசன கவிதைகள் எழுதிட தொடங்கினார்?
In whose style did Bharathiyar start writing verse poems?
(a) லிண்ட் ஹோரம்
(b) கால்டுவெல்
(c) வால்ட் விட்மன்
(d) ஹால் சிப்மேன்

**Q4.** பின்வரும் ஐம்பெரும் காப்பியங்களில், நாதகுத்தனாரால் இயற்றப்பட்ட காப்பியம் எது?
Which of the following epics was composed by Nathakutthanar?
(a) மணிமேகலை
(b) சீவகசிந்தாமணி
(c) வளையாபதி
(d) குண்டலகேசி

**Q5.** நாமக்கல் கவிஞர் எழுதியுள்ள சிறு காப்பியங்களின் எண்ணிக்கை என்னவாகும்?
What is the number of short epics written by the poet Namakkal Kavignar?
(a) 2
(b) 3
(c) 4
(d) 5

**Q6.** மறைமலையடிகள் எழுதிய நாடகத்தை பற்றிய ஆராய்ச்சி நூல் எது?
Which of these is a research book on the drama written by Maraimalayadikal?
(a) மத்தவிலாசம்
(b) சாகுந்தலம்
(c) மனோன்மணீயம்
(d) சூளாமணி



**Q7.** உழவர் ஏரடிக்கும் சிறு கோலே அரசரது செங்கோலை நடத்தும் கோல் என்று கூறியவர் யார்?
Who said that the small plow stick of the farmer is the one that holds the scepter of the king?
(a) கம்பர்
(b) மறைமலையடிகள்
(c) சேக்கிழார்
(d) சாத்தனார்

**Q8.** "சூலியல் வின்சோன்" பாராட்டிய தமிழறிஞர் யார்?
Who is the tamil scholar to have been praised by 'Suliyal Vinson'?
(a) திரு.வி.க.
(b) மறைமலையடிகள்
(c) உ.வே.சா.
(d) கவிமணி

**Q9.** குமரகுருபரரின் நீதி நெறி விளக்கம் என்னும் நூலின் எத்தனை பாடல்களுக்கு பரிதிமாற்கலைஞர் உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்?
For how many songs in Kumaragurupar's book 'Needhi Neri Vilakkam' did Paridhimaar Kalaignar write script and worked as a scriptwriter too?
(a) முப்பத்து மூன்று
(b) ஐம்பது
(c) ஐம்பத்தொன்று
(d) ஐம்பத்து மூன்று

**Q10.** தமிழகத்தில் இன்று காணப்பெறும் குடைவரைக் கோயில்களுள் பழமையானது எங்கு அமைந்துள்ளது?
Which of these rock-cut temples found in Tamil Nadu is the oldest as on today?
(a) பிள்ளையார்பட்டி
(b) கழுகு மலை
(c) திருப்பரங்குன்றம்
(d) ஆனைமலை

**Q11.** நோய்க்கு மருந்து இலக்கியம் என்று கூறியவர் யார்?
Who claims literature to be the medicine for diseases?
(a) உ. வே. சாமிநாதர்
(b) மீனாட்சி சுந்தரனார்
(c) பரிதிமாற்கலைஞர்
(d) மறைமலை அடிகளார்

**Q12.** பேரறிஞர் அண்ணாவிற்கு விருப்பமான இலக்கியம் எது?
What is the favorite literature of Perarignar Anna?
(a) கலிங்கத்துப்பரணி
(b) திருக்குறள்
(c) கம்பராமாயணம்
(d) பரிபாடல்

**Q13.** “தமிழ் மொழி அழகான சித்திரவேலைப்பாடமைந்த வெள்ளித் தட்டு” என்று கூறியவர் யார்?
Who said that 'Tamil language is a beautiful silver plate with illustrated work'?
(a) தேசிக விநாயகம் பிள்ளை
(b) ஜி.யு. போப்
(c) டாக்டர் கிரௌல்
(d) கால்டுவெல்




**Q14.** மயிலேறும் பெருமாளிடம் கல்வி கற்றவர் யார்?
Who was educated by Mayilerum Perumal?
(a) சுவாமிநாத தேசிகர்
(b) வீரமாமுனிவர்
(c) சி. இலக்குவனார்
(d) மீனாட்சி சுந்தரனார்

**Q15.** எட்டுத்தொகை நூல்களில் நாடகப் பாங்கில் அமைந்துள்ள நூல் எது?
Which of the Eight Anthologies is in a theatrical style?
(a) குறுந்தொகை
(b) அகநானூறு
(c) கலித்தொகை
(d) ஐங்குறுநூறு

**Q16.** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இருநூல் படைத்துள்ள நூலாசிரியர் யார்?
Which author has authored two books out of the Eighteen Lesser Texts?
(a) கபிலர்
(b) மூவாதியார்
(c) நல்லாதனார்
(d) கணிமேதாவியார்

**Q17.** உத்தம சோழப் பல்லவர் எனும் பட்டம் பெற்றவர் யார்?
Who holds the title of Uthama Chola Pallavan?
(a) கம்பர்
(b) சேக்கிழார்
(c) புகழேந்தி
(d) ஒட்டக்கூத்தர்

**Q18.** சேக்கிழார் புராணம் எனும் நூலை இயற்றியவர் யார்?
Who is the author of the book 'Sekkizhaar Puranam'?
(a) உமாபதி சிவாச்சாரியார்
(b) மீனாட்சிசுந்தரம் பிள்ளை
(c) இராசமாணிக்கனார்
(d) இராமதேவன்

**Q19.** பரிதிமாற்கலைஞருக்கு "திராவிட சாஸ்திரி" என்னும் பட்டத்தை வழங்கியவர் யார்?
Who conferred the title of 'Dravidian Shastri' on Paridhimaar Kalaignar?
(a) மு.சி. பூர்ணலிங்கம்
(b) சி.வை. தாமோதரனார்
(c) மறைமலையடிகள்
(d) திரு.வி. கலியாண சுந்தரனார்

**Q20.** கீழ்க்கண்டவற்றுள் பறவைகள் சரணாலயம் இல்லாத இடத்தைத் தேர்ந்தெடுக்கவும்.
From the following, select the location where there is no bird sanctuary.
(a) கரைவெட்டி
(b) கோவன்புத்தூர்
(c) வெள்ளோடு
(d) சித்திரங்குடி

**Q21.** பின்வரும் எது கண்ணதாசன் படைத்த நாடகம் ஆகும்?
Which of these plays was composed by Kannadasan?
(a) மாங்கனி
(b) ஆட்டனத்தி ஆதிமந்தி
(c) கல்லக்குடி மகா காவியம்
(d) இராசதண்டனை

**Q22.** கீழ்க்கண்டவற்றுள் தேவநேயப் பாவாணரின் சிறப்புகளில் பொருந்தாததை தேர்ந்தெடுக்கவும்.
Choose the one that does not hold good while referring to Devaneya Paavaanar.
(a) செந்தமிழ் ஞாயிறு
(b) செந்தமிழ்ச் செல்வர்
(c) இலக்கியச் செம்மல்
(d) தமிழ்ப் பெருங்காவலர்

**Q23.** பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகளுள் இல்லாத ஒன்று எது?
Which of the following is not a work of Pavalareru Perunchithiranar?
(a) கொய்யாக்கனி
(b) கனிச்சாறு
(c) கல்லக்குடி மாகாவியம்
(d) நூறாசிரியம்




**Q24.** மணிமேகலை அமுதசுரபியைப் பெற்றிட உதவியவர் யார்?
Who helped Manimegalai to get the amuthasurabhi?
(a) மணிமேகலா தெய்வம்
(b) சுதமதி
(c) தீவதிலகை
(d) அறவண அடிகள்

**Q25.** காந்திபுராணத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை என்ன?
What is the total number of songs in Gandhi Puranam?
(a) ஓராயிரத்து முப்பத்து நான்கு
(b) ஈராயிரத்து முப்பத்து நான்கு
(c) மூவாயிரத்து முப்பத்து நான்கு
(d) நான்காயிரத்து முப்பத்து நான்கு

**Q26.** மறைமலையடிகளாரின் மகள் பெயர் என்ன?
What is the name of the daughter of Maraimalayadikal?
(a) கமலாம்பிகை அம்மையார்
(b) கெசவல்லி அம்மையார்
(c) நீலாம்பிகை அம்மையார்
(d) ஞானாம்பிகை அம்மையார்

**Q27.** ஔவையார் இயற்றிய ஆத்திசூடியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை என்ன?
What is the number of songs featured in Athichudi composed by Avvaiyar?
(a) 102
(b) 105
(c) 109
(d) 111

**Q28.** அரசன் நலங்கிள்ளியை பற்றிய பாடல்கள், பின்வரும் எந்த நூல்களில் இடம்பெற்றுள்ளது?
Songs about King Nalankilli are featured in which of the following compilations?
(a) அகநானூறு
(b) புறநானூறு
(c) குறுந்தொகை
(d) நற்றிணை

**Q29.** பெருவெடிப்புக் கொள்கையின்படி, இப்பேரண்டம் விரிவடைந்து நிற்பதைக் கூறும் பாடல் இடம்பெறும் நூல் எது?
According to the Big Bang theory, which book features the song that says the universe is expanding?
(a) தேவாரம்
(b) திருவாசகம்
(c) புறநானூறு
(d) அகத்தியம்

**Q30.** "தண்டமிழ்ச் சாத்தன்" என்று பாராட்டப் பெற்றவர் யார்?
Who is popularly known as 'Tandamil Saatthan?
(a) இளங்கோவடிகள்
(b) கம்பர்
(c) திருவள்ளுவர்
(d) சீத்தலைச் சாத்தனார்

## Solutions

**S1. Ans.(b)**

**Sol.** முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சி திணையின் துறைகளுள் ஒன்றாகும். இந்நூல் உலகியல் உண்மைகளை தெளிவாக எடுத்துச் சொல்கிறது. இந்நூல் அறவுரை கோவை எனவும் வழங்கப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் மதுரை கூடலூர் கிழார். கூடலூர் இவரது பிறந்த ஊராகும். இவர் சங்க காலத்திற்குப் பின் வாழ்ந்தவர்.

**S2. Ans.(a)**

**Sol.** பெரியாரை "தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்
அவர்தாம் பெரியார்"
என்று சொன்னவர் பாவேந்தர் பாரதிதாசன்.

**S3. Ans.(c)**

**S4. Ans.(d)**

**Sol.** தமிழின் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்ற குண்டலகேசி என்னும் நூல் ஒரு பௌத்தம் சார்ந்த நூலாகும். குண்டலகேசியை இயற்றியவர் நாதகுத்தனார். இதன் காலம் 10-ஆம் நூற்றாண்டு. தன்னை கொல்ல முயன்ற கணவனைக் கொன்றுவிட்டுப் பிக்குணியாகி பௌத்த சமயத்தின் பெருமையைப் பரப்புவதில் ஈடுபட்ட குண்டலகேசி என்னும் வணிகர் குலப் பெண்ணொருத்தியின் கதையே இக் காப்பியத்தின் கருப்பொருளாகும்.

**S5. Ans.(d)**

**Sol.** நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை (அக்டோபர் 19, 1888 - ஆகஸ்ட் 24, 1972) தமிழறிஞரும், கவிஞரும் ஆவார்.
நாமக்கல்லாரின் படைப்புகள்
இசை நாவல்கள் - 3
கட்டுரைகள் - 12
தன் வரலாறு - 3
புதினங்கள் - 5
இலக்கிய திறனாய்வுகள் - 7
கவிதை தொகுப்புகள் - 10
சிறுகாப்பியங்கள் - 5
மொழிபெயர்ப்புகள் – 4




**S6. Ans.(b)**

**S7. Ans.(a)**

**S8. Ans.(c)**

**Sol.** உ.வே.சாவின் தமிழ் பணிகளை பாராட்டிய வெளிநாட்டு அறிஞர்கள்: ஜி.யு.போப், சூலியல் வின்சோன்.

**S9. Ans.(c)**

**Sol.** நீதி நெறி விளக்கம் ஒரு தமிழ் நீதி நூல். குமரகுருபரர் இயற்றிய இந்நூல 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்த நூலில், 51 பாடல்களுக்கு பரிதிமாற்கலைஞர் உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்.

**S10. Ans.(a)**

**Sol.** தமிழகத்தின் தென்பகுதியான சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பிள்ளையார்ப்பட்டி என்னும் ஊரின் குடைவரைக் கோயிலே இன்று காணப்படும் குடைவரைக் கோயில்களில் மிக பழமையானதாகும்.

**S11. Ans.(b)**

**Sol.** பன்மொழிப்புலவர் என்று அழைக்கப்பட்ட தெ. பொ. மீனாட்சிசுந்தரம் (08 சனவரி 1901 – 27 ஆகத்து 1980) 20 ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களுள் ஒருவர்.

**S12. Ans.(a)**

**Sol.** கலிங்கத்துப்பரணி என்ற நூல் பரணி வகையைச் சார்ந்த சிற்றிலக்கியம் ஆகும். இந்நூல் முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்கப் போர் வெற்றி குறித்துப் பாடப்பட்ட நூல் ஆகும். குலோத்துங்கனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது. இது செயங்கொண்டார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது.

**S13. Ans.(c)**

**Sol.** டாக்டர் கிரௌல், “ தமிழ்மொழி அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்; தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது” என்று மொழிந்து இன்புற்றார்.

**S14. Ans.(a)**

**Sol.** சுவாமிநாத தேசிகர் தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் மயிலம் அருகிலுள்ள வளவனூர் எனும் கிராமத்தில் பழையான சைவ சித்தாந்தத்தைப் பின்பற்றும் தேசிகர் குடும்பத்தில் 19ம் நூற்றாண்டின் மத்தியில் பிறந்தவர். இவர் மயிலேறும் பெருமாளிடம் கல்வி கற்றார்.

**S15. Ans.(c)**

**Sol.** கலித்தொகை சங்க காலத் தமிழிலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவது நூலாகும். கலித்தொகை நூலை முதன்முதலில் சி. வை. தாமோதரம்பிள்ளை 1887-ஆம் ஆண்டில் பதிப்பித்தார். இதன் பாடல்களில் நாடகப் பாங்கிலான பாக்களும் அமைந்து படிப்போர்க்கு இன்பம் தருவதாக அமைந்துள்ளன.

**S16. Ans.(d)**

**Sol.** பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுப்பில் கணிமேதாவியார் இயற்றிய நூல்கள்:

1. ஏலாதி
2. திணைமாலை நூற்றைம்பது




**S17. Ans.(b)**
**Sol.** சேக்கிழார் என்பவர் 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவ அடியார் ஆவார். இவர் இரண்டாம் குலோத்துங்க சோழனின் அரசவையில் முதன்மை மந்திரியாக இருந்தவர். சிவத்தொண்டின் காரணமாகவும், மதிநுட்பத்தின் காரணமாகவும் இவர் உத்தம சோழப் பல்லவன், தொண்டைமான், தெய்வப்புலவர், தெய்வச்சேக்கிழார் போன்ற பட்டங்களைப் பெற்றவர்.

**S18. Ans.(a)**
**Sol.** உமாபதி சிவாச்சாரியார் என்பவரால் சேக்கிழார் புராணம் எனும் நூலும், மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் எனும் நூலும் சேக்கிழாரை முன்வைத்து இயற்றப்பட்டுள்ளன.

**S19. Ans.(b)**
**Sol.** பரிதிமாற் கலைஞர் எனப்படும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (சூலை 6, 1870 - நவம்பர் 2, 1903) ஒரு தமிழறிஞரும், நூலாசிரியரும், தனித்தமிழ் இயக்கத்தில் முதன்மையான பங்கு வகித்தவர்களில் ஒருவரும் ஆவார். இராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் திராவிட சாஸ்திரி என சிறப்பிக்கப்பட்டார்.

**S20. Ans.(b)**
**Sol.** கோவன்புத்தூர் என்பது கோயம்பத்தூரின் பழைய பெயர் ஆகும்.

**S21. Ans.(d)**
**Sol.** "இராசதண்டனை" என்பது கம்பர்-அம்பிகாபதி வரலாற்றை வைத்து கண்ணதாசன் படைத்த நாடகம் ஆகும்.

**S22. Ans.(c)**
**Sol.** தேவநேயப் பாவாணர் (Devaneya Pavanar, 7 பிப்பிரவரி, 1902 - சனவரி 15, 1981) மிகச்சிறந்த தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார்.
1. 12.01.1964 - தமிழ்ப்பெருங்காவலர் விருது; தமிழ்க் காப்புக் கழகம், மதுரை
2. 05.05.1971 - குன்றக்குடி அடிகளார் பாரி விழாவில் 'செந்தமிழ் ஞாயிறு' விருது வழங்குதல்.
3. 15.01.1979 - தமிழ்நாட்டு அரசு 'செந்தமிழ்ச் செல்வர்' விருது வழங்குதல்.

**S23. Ans.(c)**
**Sol.** கல்லக்குடி மாகாவியம் கண்ணதாசன் அவர்கள் இயற்றிய நூலாகும்.

**S24. Ans.(c)**

**S25. Ans.(b)**

**S26. Ans.(c)**
**Sol.** திருவரங்க நீலாம்பிகை அம்மையார் (1903-1945) சிறந்த தமிழறிஞர்களில் ஒருவர். வடமொழியும் ஆங்கிலமும் அறிந்தவர். மறைமலை அடிகளாரின் மகளாகிய இவர், அவரைப் போன்றே மொழியறிவு நிரம்பியவர்.

**S27. Ans.(c)**

**Sol.** ஆத்திசூடி என்பது 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் இயற்றிய நீதி நூல் ஆகும். சிறுவர்கள் இளம் பருவத்திலேயே பாடம் செய்து மனதில் இருத்திக்கொள்ளும் வகையில் சிறுசிறு சொற்றொடர்களால் எளிமையாக அமைந்தது ஆத்திசூடி. இதில் 109 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.




**S29. Ans.(b)**

**Sol.** நலங்கிள்ளி முற்காலச் சோழர்களுள் ஒருவன். இன்னொரு முற்காலச் சோழ மன்னனான நெடுங்கிள்ளி என்பவனுடன் ஏற்பட்ட அதிகாரப் போட்டி தொடர்பாகவே இவனுடைய பெயர் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றது. புறநானூற்றில் 14 பாடல்களுக்குக் குறையாமல் நலங்கிள்ளியைப் புலவர்கள் பாடியுள்ளார்கள்.

**S29. Ans.(b)**

**Sol.** திருவாசகம் என்பது சைவ சமயக் கடவுளான சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும். இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர்.

**S30. Ans.(d)**

**Sol.** சீத்தலைச் சாத்தனார் என்பவர் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களில் ஒருவர் ஆவார். மணிமேகலை என்னும் காப்பியத்தைப் படைத்தவர். சீத்தலைச் சாத்தனார் 'நன்னூற் புலவன்', 'தண்டமிழ்ச் சாத்தன்' என்று போற்றப்படுகிறார்.














DOWNLOAD
Admit Card


வெற்றி வாராந்திர நடப்பு
நிகழ்வுகள் PDF தமிழில்
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


UPCOMING JOB
ALERT ARTICLE
IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


TAMILNADU
STATE
GENERAL KNOWLEDGE
Q & A PDF
தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்


செப்டம்பர் மாத பதிப்பு
வெற்றி ADDA247
தமிழ்நாடு மாதாந்திர நடப்பு
நிகழ்வுகள் தமிழில் 2021 PDF
TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4,
TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல


செப்டம்பர் மாத பதிப்பு
வெற்றி ADDA247
மாதாந்திர நடப்பு
நிகழ்வுகள் Q & A தமிழில் 2021 PDF
TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4,
TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல
தமிழில் 260 முக்கிய
கேள்விகள்
PDF வடிவில்
பதில்களுடன்
போட்டித் தேர்வுக்கானது










ADDA247 APP க்குச் செல்லுங்கள், தமிழ்நாடு மாநிலத் தேர்வு பிரிவில் பயிலுங்கள்.

வெற்றிப்படி நமதே!!!